# 2019-2020

# Engagements

THE HINDU 27.08.2019

## ENGAGEMENTS

### ERODE

**Sri Vasavi College (Self Finance Wing):** TECHCOM'19, V. Sivakumar, Director, Sri Vasavi Institutions, chief guest, 9.30 a.m.

**Kongu Arts and Science College:** Science fest, R. Balamurali, Chief Educational Officer, chief guest, 10 a.m.

### SALEM

**The Hindu, TCS:** Principals and educators conclave, Hotel Radisson, 10.30 a.m.

### NAMAKKAL

**Mahendra Institute of Technology:** Workshop on 'Ansys APDL and Validations', 10 a.m.

**Muthayammal Engineering College:** ISTE sponsored seminar on geometrical dimensioning and tolerance, 10 a.m.

**Muthayammal College of Arts and Science:** National seminar-cum-workshop on Foldscope, Assembly, Imaging and it's application and twinning programme, 10.30 a.m.

**Paavai College of Engineering:** Alumni guest lecture, 10 a.m.

**PGP College of Arts and Science:** Workshop on vegetables and fruits carving, 10 a.m.

இந்து தமிழ் 27.08.2019

ஊர்வலம்

## நகரில் நடப்பவை

**சேலம்**

- **அரசுப் பொருட்காட்சி:** புதிய பேருந்து நிலையம் அருகில், சேலம். மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை.

**நாமக்கல்**

- **தொழில்நுட்பக் கருத்தரங்கம்:** மகேந்திரா பொறியியல் கல்லூரி, மல்லசமுத்திரம், திருச்செங்கோடு, காலை 10 மணி.
- **சிவில் துறை கருத்தரங்கம்:** பாவை பொறியியல் கல்லூரி, ராசிபுரம், காலை 10 மணி.
- **காய்கறிகள் மற்றும் பழங்கள் வடிவமைப்பு பயிற்சி:** பிஜிபி கலை, அறிவியல் கல்லூரி, நாமக்கல், காலை 10 மணி.

**ஈரோடு**

- **பள்ளி மாணவர்களுக்கு இடையிலான அறிவியல் கண்காட்சி:** கொங்கு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு, பங்கேற்பு: மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி, காலை 10 மணி.

பள்ளி, கல்லூரிகள், கோயில், சங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை இலவசமாக வெளியிடுகிறோம்.

மின்னஞ்சல்: repsalem@hindutamil.co.in



# Science Exhibition

★★ தினமணி கோவை 3

## மாவட்ட குழந்தைகள் அறிவியல் மாநாடு: 107 ஆய்வறிக்கைகள் சமர்ப்பிப்பு




சிறந்த ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்த மாணவர்களுக்குப் பரிசு வழங்குகிறார் கொங்கு கலை, அறிவியல் கல்லூரித் தாளாளர் கே.பழனிசாமி.

ஈரோடு, நவ. 7: மாவட்ட அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் 107 ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறை நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் மூலம் கடந்த 27 ஆண்டுகளாக தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை நடத்திவருகிறது. இந்த ஆண்டு தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டு ஆய்வு தலைப்பாக தூய்மையான, பசுமையான, வளமான தேசத்துக்காக அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மாவட்ட அளவிலான மாநாடு, ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில், மாவட்டம் முழுவதும் இருந்து 107 ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதில், 8 சிறந்த ஆய்வறிக்கைகள் நவம்பர் 16,17 ஆம் தேதிகளில் வேலூரில் நடைபெற உள்ள மாநில மாநாட்டுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு அறிவியல் இயக்க முன்னாள் மாநிலத் தலைவர் நா.மணி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் என்.ராமன் வாழ்த்திப் பேசினார். சிறந்த ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த மாணவர்களுக்கு கல்லூரித் தாளாளர் கே.பழனிசாமி பரிசு வழங்கிப் பாராட்டினார். தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ் (என்.சி.எஸ்.சி.) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி.கந்தசாமி நன்றி கூறினார்.

★★★ ஈரோடு 7-11-2019 9




கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

## தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு

ஈரோடு, நவ.7–

மத்திய அரசின் உயிரி தொழில் நுட்பத்துறை நட்சத்திர கல்லூரி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஈரோடு மாவட்ட அளவிலான தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு நஞ்சனாபுரம் கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது. இதில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிக்கூடத்தில் இருந்தும் பங்கேற்ற மாணவ–மாணவிகள் 107 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். இதில் 8 கட்டுரைகள் சிறந்தவையாக தேர்வு செய்யப்பட்டன. இந்த மாதம் (நவம்பர்) 16, 17 ஆகிய தேதிகளில் வேலூரில் நடைபெறும் மாநில மாநாட்டில் இந்த கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. மாநாட்டில் பங்கேற்ற மாணவ–மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க முன்னாள் மாநில தலைவர் நா.மணி தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் என்.ராமன் வாழ்த்தி பேசினார். கல்லூரி தாளாளர் பழனிசாமி சான்றிதழ்கள், பதக்கங்கள் வழங்கினார். முன்னதாக பேராசிரியை சங்கீதா வரவேற்றார். முடிவில் ஒருங்கிணைப்பாளர் டி.கந்தசாமி நன்றி கூறினார்.

தினகரன் | 29.8.2019

# கொங்கு கல்லூரியில் அறிவியல் கண்காட்சி



► ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி நடந்தது.

ஈரோடு, ஆக.29: ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி நடந்தது.

இக் கல்லூரிக்கு இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் உயிரித் தொழில்நுட்பத்துறை மூலம் இளநிலை அறிவியலை மேம்படுத்தும் வகையில் நட்சத்திரக் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டு அதன் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளுக்கு இடையிலான அறிவியல் கண்காட்சி நடந்தது. இதில், 30க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச்சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது அறிவியல் படைப்புகளை காட்சிபடுத்தினர்.

கண்காட்சிக்கு கல்லூரி தாளாளர் இளங்கோ தலைமை வகித்தார். முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி கலந்து கொண்டு பேசினார். கல்லூரி இணை பேராசிரியரும், இளங்கலை கணினி அறிவியல்துறைத் தலைவருமான ரமேஷ் முதல்வர் ராமன், கணிதத் துறைத் தலைவர் நாகராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியின் நிறைவு விழாவில் மாணவ மாணவிகளின் சிறந்த படைப்புகளுக்கு கல்லூரி தாளாளர் இளங்கோ பரிசுகளை வழங்கினார்.

தினமணி

வியாழக்கிழமை, 29 ஆகஸ்ட் 2019

## கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி



கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மாணவர்களின் அறிவியல் படைப்புகளைப் பார்வையிடுகிறார் கல்லூரித் தாளாளர் ஏ.கே.இளங்கோ.

ஈரோடு, ஆ.க. 28: ஈரோடு கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

கொங்கு கலை அறிவியல் கல்லூரிக்கு இந்திய அறிவியல், தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் இயங்கும் உயிரித் தொழில்நுட்பத் துறை மூலம் இளநிலை அறிவியலை மேம்படுத்தும் வகையில் நட்சத்திரக் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டு அதன் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளுக்கு இடையிலான அறிவியல் கண்காட்சி கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன் தொடக்க விழா நிகழ்ச்சிக்கு, கல்லூரித் தாளாளர் ஏ.கே.இளங்கோ தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி கலந்துகொண்டு கண்காட்சியைத் தொடங்கிவைத்துப் பேசினார். கணினி அறிவியல் துறைத் தலைவர் பெ.ரமேஷ் வரவேற்றார். முதல்வர் ந.ராமன் வாழ்த்திப் பேசினார். கண்காட்சிக்கான ஏற்பாடுகளை உயிரி வேதியியல் துறைத் தலைவர் ஏ.கே.வித்யா, துறைத் தலைவர்கள், உதவிப் பேராசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் செய்திருந்தனர். கணிதத் துறைத் தலைவர் சே.நாகராஜன் நன்றி கூறினார்.

இதில், 30 க்கும் மேற்பட்ட பல்வேறு அரசு, தனியார் பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவிகள் கலந்துகொண்டு தங்கள் அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்தினர். நிறைவு விழாவில் மாணவ, மாணவிகளின் சிறந்த படைப்புகளுக்கு கல்லூரித் தாளாளர் பரிசுகள் வழங்கினார்.

# Inauguration

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் சைபர் க்ரூஸ் மாணவர் மன்ற தொடக்க விழா



ஈரோடு ஜூலை 5

கொங்கு கலை அறிவி ல் கல்லூரியில் இளங்கலை ..சத்திர அந்தஸ்த்து பெற்ற ..ணினி அறிவியல் துறை ..சபர் க்ரூஸ் மாணவர் ..ன்ற தொடக்க விழா நடை ..பற்றது. இவ்விழாவில் ..ப்பு விருந்தினராக ..ாவை பாரதியார் பல்க ..லக் கழக கணிணி அறிவி ..ல் துறை, உதவிப்பேராசிரி ..ர் முனைவர் டி. ரம்யா சித்ரா கலந்துகொண்டு மாணவர்களின் கவனிப்பு மற்றும் கேட்புத்திறனை வளர்க்க வேண்டும் என்றும் மாணவர்களின் ஆலுமைத்திறனை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் சிறப்பாக உரையாற்றினார். மேலும் இவ்விழாவில் மாணவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை கேட்டு பயனடைந்தனர். இவ்விழாவினை கல்லூரியின் முதல்வர் முனைவர் என். இராமன் தலைமை தாங்கினார். கணிணி அறிவியல் துறை சார்ந்த இணைப் பேராசிரியை முனைவர் வி. கிருஷ்ணவேணி வரவேற்பு உரையாற்றினார். இத்துறையின் தலைவர் ரமேஷ்இவ்வாண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தை வாசித்தார். மேலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்களும் கலந்துகொண்டு பயன்பட்டனர்.

# Placement Training

தினபூமி 01.08.2019



..ங்கு கலை அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் ..
நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின்
..ணவர்களுக்கான வேலைவாய்ப்பு குறித்து சிறப்புப் பயிற்சி நடைபெற்றது

# Hands on Workshop



உரிமைகளும், 2 பழங்குடியின சங்கங்களுக்கு வீட்டுத் களை மாவட்ட கலெக்டர் வழங்கி, மனித நேய வார கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிற்சி பட்டறை

ஈரோடு ஜன31

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பாக கணினி அறிவியல் துறை மாணவ மாணவியர்களுக்கு, நெறிமுறை ஹேக்கிங் குறித்தும், கடவுச்சொல் சொல் நீக்கும் கருவி மற்றும் சாதனத்தைக் கண்டுபிடிப்பது குறித்தும் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்வில் சைபர் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆலோசகர். சந்திர பிரகாஷ் சங்கர், கலந்துகொண்டு சைபர் பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளங்கலை கணினி அறிவியல் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் சுமார் 180 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கு சிறப்புப்பயிற்சி

## கொடிவேரி சாரதா இண்டர்நேஷனல் பள்ளியில் மாணவர்களின் திறன் வெளிப்பாடு நாள்